**People's Watch**
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452 - 2531874
E.mail: info@pwtn.org
Web: www.peopleswatch.org

14.10.11

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்**
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
அண்ணாசாலை
சென்னை 60002

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 16 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 08.10.2011 முதல் 14.10.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

**08-10-2011 முதல் 14-10-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | |
| 5. | வகுப்பறை வன்முறை | |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | |
| 9. | கொத்தடிமை | |
| 10. | பெண் சிசு கொலை | |
| 11. | குழந்தை திருமணம் | |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | |
| 17. | மணல் கொள்ளை | |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | |
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | |

மக்கள் கண்காணிப்பகம்

| | | |
|---|---|---|
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | |
| 22. | பொதுவானவை | |
| | மொத்தம் | |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

**(ஹென்றி டிபேன்)**
நிர்வாக இயக்குநர்

**நகல்கள்:**

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-39
## 08.10.2011 முதல் 14.10.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 2461. | 08.10.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழனி அருகே வீரலப்பட்டியைச் சேர்ந்த தில்லைநாதன் மகள் மணிமாலா(11). மணிமாலாவை அகதிகள் முகாமைச் சேர்ந்த நேரு விஜயன், அஜந்தன், நகுநலன், சசி, ஆகியோர் கேலி செய்தனர். தட்டிக்கேட்ட தில்லைநாதனை 4பேரும் சேர்ந்து தாக்கியதாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தமிழ்சுடர் |
| 2462. | 08.10.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கடலாடி அருகே நரசிங்கங்கூட்டம் கிராமத்தைச் சேர்ந்த குமரையா மனைவி ராமு(60). அதே பகுதியைச் சேர்ந்த திருக்கண்ணன் மனைவி வள்ளி(50) இருவருக்கும் ஏற்பட்ட நிலத்தகராறில் வள்ளி மற்றும் அவரது மகள் பாண்டீஸ்வரி இருவரும் சேர்ந்த ராமுவின் காதை அறுத்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினசூரியன் |
| 2463. | 08.10.2011 | **மதுரை மாவட்டம்:** பொன்மேனியைச் சேர்ந்த பரமேஸ்குமார் மனைவி சுசித்ரா வித்யலட்சமி(24). கணவர் மற்றும் குடும்பத்தார் கூடுதல் வரதட்சணை கேட்டுத் துன்புறுத்தியதோடு, வீட்டில் அறையில் பூட்டி சித்திரவதை செய்ததாக சுசித்ரா வித்யலட்சுமி புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | தினகரன் |
| 2464. | 08.10.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை பெத்தானியாபுரத்தைச் சேர்ந்த பெருமாள். இவர் கனரா வங்கியில் பணிபுரிந்து ஓய்வு பெற்றார். தனது மூன்று மகள்களுக்கும் வங்கியில் கல்வி கடன் வாங்கினார். கல்வி கடன் பாக்கி இருந்ததால் வங்கி நிர்வாகம் பெருமாளின் ஓய்வூதிய பலன்களை நிறுத்திவைத்திருப்பதாக வங்கி நிர்வாகம் மீது பெருமாள் புகார். | முதியோர்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 2465. | 08.10.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னையை அடுத்த திருநின்றவூர் சி.டி.எச். சாலையைச் சேர்ந்த கணேசன் இவரின் உறவினர் தமிழ்செல்வி(40). தமிழ்செல்வி தனது வீட்டிற்கு மின் இணைப்பு கொடுக்க திருநின்றவூர் மின்சார அலுவலத்திற்கு சென்று இளநிலை பொறியாளர் கே.பிரபாகரனை அணுகினார். பிரபாகர் ரூபாய். 1,500 லஞ்சம் கேட்டதாக தமிழ்செல்வி புகார். பிரபகரன் கைது. | லஞ்சம் | தினத்தந்தி |
| 2466. | 08.10.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** | மீனவர்கள் | தினமணி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | ராமேசுவரத்தில் இருந்து அக்டோபர் 5ம்தேதி மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் நாகராஜ், சக்திவேல், மகேந்திரன் மூன்று மீனவர்களைக் காணவில்லை என புகார். | மீதான வன்முறை | |
| 2467. | 08.10.2011 | **கடலூர் மாவட்டம்:** கடலூர் அருகே உள்ள பெரிய கங்கனாங்குப்பத்தில் உள்ள செயின்ட் ஆண்டனி மெட்ரிக் பள்ளியில் கழிவறைக்கு முன்புறமாக இருந்த தடுப்புச்சுவர் இடிந்து விழுந்ததில் பள்ளியில் இரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவன் கிஷோர்ராஜ்(7). மரணம். மூன்றாம் வகுப்பு படிக்கம் மாணவன் ஹரிஷ்(8) மருத்துவமனையில் சிகிச்சை. | குழந்தைகள் மீதான வன்முறை & வகுப்பறை வன்முறை | தீக்கதிர் |
| 2468. | 08.10.2011 | **நெல்லை மாவட்டம்:** கேரள மாநிலம் பத்தனம்திட்டா மாவட்டம் ஹவுஸ் என்ற ஊரைச் சேர்ந்த மனோஜ் மகள் மிதுலா(19). இவர் நெல்லை சேரன்மகாதேவியிலுள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் விடுதியில் தங்கி படித்து வந்தார். விடுதியில் மிதுலா தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 2469. | 08.10.2011 | **ஈரோடு மாவட்டம்:** ஈரோடு சங்குநகரைச் சேர்ந்த சரவணராஜு மனைவி சுபத்ரா. மகள் இலக்கியா. வீட்டின் தனியாக இருந்த சுபத்ரா மற்றும் மகள் இலக்கியா இருவரும் வீட்டில் மர்மமான முறையில் தீயில் கருகி இறந்துகிடந்தாகப் புகார். | பெண்கள் மீதான வன்முறை & குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 2470. | 08.10.2011 | **மதுரை மாவட்டம்:** கூடல்நகர் முகாமைச் சேர்ந்த அருண்நேசன் மகன் ஆன்டனி(8). விடுமுறைக்கு மேலூர் அருகில் உள்ள திருவாதவூர் அகதிகள் முகாமில் வசிக்கும் தனது பெரியம்மா வீட்டிற்கு வந்தான். கிரிக்கெட் விளையாடும்போது பந்து ரோட்டில் விழுந்தது எடுக்கச் சென்ற சிறுவன் மீது கார் மோதி சிறுவன் மரணம். | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 2471. | 09.10.2011 | **சிவகங்கை மாவட்டம்:** திருப்பத்தூர் தெம்மாப்பட்டியைச் சேர்ந்த சிவகாமி(17). திருப்புத்தூரில் உள்ள கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வந்தார். அதே பகுதியைச் சேர்ந்த சக்திவேல். இருவரும் காதலித்தனர். கண்டவராயன்பட்டியைச் சேர்ந்த சரத்குமார்(19) சக்திவேல் அழைத்துவரச் சொன்னதாக கூறி சிவகாமியை அழைத்துச் சென்று களிர்பானத்தில் மயக்கமருந்து கொடுத்து பாலியல் பலாத்கராம். சரத்துகுமார் மீது | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | சிவகாமி புகார். சரத்குமார், மற்றும் சக்திவேல் உள்பட 3 பேர் கைது. | | |
| 2472. | 09.10.2011 | **கோவை மாவட்டம்:** கோவை அருகே உள்ள துடியலூர் ஜி.என்.மில், என்.எஸ்.கார்டன் பகுதியைச் சேர்ந்த ஜெயவேல் வீட்டை வீட்டில் குடியிருந்து பரமேஸ்வரன் வீட்டை காலி செய்ய மறுப்பு. பரமேஸ்வரன் மீது ஜெயவேல் காவல்நிலையத்தில் புகார். பரமேஸ்வரின் வக்கீல் ஆனந்தீஸ்வரன். காவல்நிலையத்திற்கு வந்து ஆனந்தீஸ்வரன் மற்றும் பணியில் இருந்த சப்–இன்ஸ்பெக்டர் ரேணுகாதேவி, ஏட்டு கோபாலகிருஷ்ணன் மூவருக்கும் வாய்த்தகராறு. ஏட்டு மற்றும் சப்இன்ஸ்பெக்டர் ஆனந்தீஸ்வரனை தாக்கியதால் வக்கீல்கள் போராட்டம். எட்டு, மற்றும் சப் இன்ஸ்பெக்டர் பணியீடைநீக்கம். | காவல் நிலையச் சித்திரவதை | தினத்தந்தி |
| 2473. | 10.10.2011 | **மதுரை மாவட்டம்:** புதுதாமரைப்பட்டியைச் சேர்ந்த செல்வம் மகள் காளீஸ்வரி(18). பேருந்துநிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த காளிஸ்வரி அணிந்திருந்த நகையை கிழவனேரி ஊரைச் சேர்ந்த சீனிவாசன் பறித்துச் சென்றதாகப் புகார். | பெண்கள் மீதான வன்முறை & நகை பறிப்பு | தினமணி |
| 2474. | 10.10.2011 | **கோவை மாவட்டம்:** பொள்ளாச்சி அடுத்த ஏரிபட்டி ஊராட்சி தலைவர் மனோகரனின் மகள் வர்ஷினி(29). மதுரை கப்பலூரைச் சேர்ந்த தனியார் பொறியியல் கல்லூரி இயக்குனர் தனவேல்(39), விரிவுரையாளர்கள் ஜான்பாஷா(32), வெங்கடேசன்(21) வர்ஷனியை கடத்திச் சென்றதாகப் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினமலர் |
| 2475. | 10.10.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் அருகே ராமையன்பட்டியைச் சேர்ந்த சசிக்குமார்(38) மகள் மணிமேகலை(15). 9ம் வகுப்பு படிக்கும் மணிமேகலையை தந்தை சசிக்குமார் பாலியல் பலாத்காரம். மணிமேகலை கர்ப்பம். சகிக்குமார் கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 2476. | 10.10.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டுத் தாக்கியதோடு மீன்பிடிக்கவிடாமல் துரத்தியதாகப் புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2477. | 11.10.2011 | **சிவகங்கை மாவட்டம்:** திருப்புவனம் அருகில் உள்ள கங்கன்குளம் | தலித்துகள் மீதான வன்முறை | O. ஆனந்த் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கிராமத்தைச் சேர்ந்த தலித் மாணவி(16). ஆதிக்க சமூகத்தைச் சேந்த இளைஞர்கள் பாலியல் வன்கொடுமை. காவல்நிலையத்தில் புகார் கொடுத்தும் காவலர்கள் புகார் வாங்க மறுப்பு. | & காவல் நிலையச் சித்திரவதை & குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | |
| 2478. | 11.10.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரையைச் சேர்ந்த செல்வக்குமார்(33). இவர் சென்னை வீரபுரத்தில் பட்டாலியன் காவலராக பணிபுரிகிறார். பேச்சியம்மன் படித்துறையில் செல்வகுமார் மற்றும் அவரது நண்பர்கள் முத்துக்குமார், ராம்குமார் குடிபோதையில் தகராறு செய்ததாக புகார். | காவல் நிலையச் சித்திரவதை | தினமணி |
| 2479. | 11.10.2011 | **மதுரை மாவட்டம்:** வண்டியூர் பகுதியைச் சேர்ந்த ஜெயலெட்சுமி அவரது தம்பி ஜெய்கணேஷ். காமராஜர்புரத்தைச் சேர்ந்த முத்துக்கருப்பையா தங்களுக்கு சொந்தமான நிலத்தை விற்றதோடு, தனது தம்பி ஜெய்கணேசை கடத்திச் சென்றதாக ஜெயலெட்சுமி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமணி |
| 2480. | 11.10.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னையைச் சேர்ந்த சியமளா. அதே பகுதியைச் சேர்ந்த மகேஷ். இருவரும் கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம் மூணாறு, பார்வதி அம்மன் கோவில் அருகில் உள்ள விடுதியில் தங்கினார்.இருவருக்கும் ஏற்பட்ட தகராறில் ஆத்திரமடைந்த மகேஷ் சியமளாவைக் கொலை செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |
| 2481. | 11.10.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி அருகே வடபட்டியில் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் ஆலை தொழிலாளர் சுப்பு(50), தங்கம்மாள், கூடம்மாள், பாப்பா காயம். 4 பேரும் சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை. | பட்டாசு ஆலை விபத்து | தினகரன் |
| 2482. | 11.10.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசியை அடுத்த பெரியபொட்டல்பெட்டி கிராமத்தில் வசிக்கும் சாக்கரடீஸ் என்பவரது பட்டாசு ஆலையில் பணிபுரியும் தொழிலாளி மூடையை தூக்கமுடியாமல் அதை இழுத்ததால் பட்டாசு உராய்ந்து தீ பிடித்ததில் அங்கு பணிபுரிந்த சுப்புத்தாய் காயம். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை & பட்டாசு ஆலை வெடிவிபத்து | தினகரன் |
| 2483. | 11.10.2011 | **கடலூர் மாவட்டம்:** முத்துநகர் அருகே உள்ள ஏணிக்காரன் தோட்டத்தைச் சேர்ந்த பரமேஸ்வரி மகன் பசுபதி(24). தாயுக்கும் மகனுக்கும் எற்பட்ட தகராறில் | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆத்திரமடைந்த பசுபதி குடிபோதையில் பரமேஸ்வரியை அடித்துக் கொலை செய்ததாகப் புகார். | | |
| 2484. | 12.10.2011 | **மதுரை மாவட்டம்:** முனிச்சாலையைச் சேர்ந்த ராஜேஸ்வரி கான்பாளையம் அருகே நடந்து வந்தபோது 30 வயது மதிக்கத்தக்க மர்ம நபர் ராஜேஸ்வரியை தாக்கியதோடு, அவர் அணிந்திருந்த ரூ. 30 அயிரம் மதிப்புள்ள தங்க குண்டுமணியை வழிப்பறி செய்ததாக ராஜேஸ்வரி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2485. | 12.10.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை தெற்குவாசல் அருகே வாகன சோதனையின் போது ஆட்டோவில் 135 கிலோ ரேசன் அரிசி கடத்திய சோழவந்தான் அருகே உள்ள பிள்ளையார் நத்தத்தைச் சேர்ந்த ஜோதி, ராஜேஸ்வரி மற்றும் கஜேந்திரன் மூவரும் கைது. | அரிசி கடத்தல் | தினமலர் |
| 2486. | 12.10.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை நரிமேட்டை சேர்ந்த மொக்கையா மகள் மீனாட்சி(25) இவர் ஆயுதப்படை காவலரக பணிபுரிகிறார். தனது குடும்ப சூழல் காரணமாக தற்கொலை செய்துக்கொள்வதாக கடிதம் எழுதிவிட்டு தனது துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினத்தந்தி |
| 2487. | 12.10.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை மாவட்டத்தில் போட்டியிடும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக தேர்தல் பணியில் ஈடுபட்டுவரும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஊழியர்களை மதுரை மாவட்ட காவல்துறை எந்தவித முகாந்திரமும் இன்றி கைது செய்வதாகப் புகார். | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 2488. | 12.10.2011 | **சேலம் மாவட்டம்:** சேலம் அம்மாபேட்டையைச் சேர்ந்த ஜெயபிரகாஷ்(28) மனைவி விஜயலெட்சுமி(26). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஜெயபிரகாஷ் தாக்கியதாக விஜயலெட்சுமி புகார். காவல் நிலைய விசாரணையில் போது எஸ்.ஐ.வெங்கடேசன் விரலை ஜெயபிரகாஷ் கடித்துத் துப்பியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை --- | தினகரன் |
| 2489. | 13.10.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை, நந்தப்பாக்கம் அருகே மாயவரம் என்ற படப்பிடிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, நந்தப்பாக்கம் காவலர்கள் படப்பிடிப்பு குழுவிடம் லஞ்சம் | காவல் நிலையச் சித்திரவதை | கலைஞர் டிவி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | கேட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். | | |
| 2490. | 13.10.2011 | **மதுரை மாவட்டம்:** வெள்ளைச்சாமி நாடார் கல்லூரியில் பிசிஏ படிக்கும் மாணவி ஒருவரை, சுயநிதிக் கல்லூரியின் நிர்வாக இயக்குனர் அசோகன் பாலியல் ரீதியாக தொந்தரவு செய்ததாக கல்லூரி மாணவி புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தீக்கதிர் |
| 2491. | 13.10.2011 | **மதுரை மாவட்டம்:** வேலூர்அடுத்த ஆர்.என்.பாளையத்தைச் சேர்ந்த பால் வியாபாரி ஜோதிநாதன். ஜோதிநாதன் தனது நிலத்திற்கு சிட்டா பட்டா வாங்க துணை சர்வேயர் பாண்டியனை அணுகினார். அவர் ரூபாய் 7 ஆயிரம் லஞ்சம் கேட்டதாகப் புகார். பாண்டியன் கைது. | லஞ்சம் | தினமலர் |
| 2492. | 14.10.2011 | **சிவகங்கை மாவட்டம்:** தேவகோட்டை ஞானந்தகிரி நகரைச் சேர்ந்த செபஸ்தியம்மாள்(70). கோயிலுக்குச் சென்ற செபஸ்தியம்மாளிடம் இரண்டு மர்ம நபர்கள் தாங்கள் காலவர்கள் என கூறி கோயில் அருகே நகை வழிப்பறி 31/2பவுன் செயினை அபகரித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 2493. | 14.10.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** தூத்துக்குடி, தாமோதரன் நகர் 2 வது தெருவில் உள்ள ஒரு வீட்டில் வாக்காளர்களுக்கு தருவதற்காக, பதுக்கி வைக்கப்பட்டிருந்த 85 மூடை ரேசன் அரிசி பறிமுதல். தி.மு.க., வேட்பாளர் ஆனந்தராஜ் மீது வழக்கு. | ரேசன்அரிசி பறிமுதல் | தினமலர் |
| 2494. | 14.10.2011 | **விருதுநகர் மாவட்டம்:** திருவில்லிபுத்தூர் அருகே பெருமாள்தேவன்பட்டியைச் சேர்ந்த பாண்டியராஜன் மவைி லட்சுமி(37). மனைவியில் நடத்தையில் சந்தேகப்பட்ட பாண்டியராஜன் இரவில் தூங்கிக் கொண்டிந்த மனைவியை அரிவாளால் வெட்டிக் கொலை செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 2495. | 14.10.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலத்தைச் சேர்ந்த 15 வயது சிறுமியை பெற்றோர் திருமணம் செய்து வைத்தனர். பெற்றோர் வீட்டிற்கு வந்த சிறுமியை அதே பகுதியைச் சேர்ந்த சந்திரா விபச்சாரத்தில் ஈடுபடுத்தியதாக புகார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினகரன் |
| 2496. | 14.10.2011 | **மதுரை மாவட்டம்:** பிரமனூர், பஞ்சாயத்து தலைவர் பதவி எஸ்.சி, எஸ்.டி பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. முத்துலெட்சுமி, ஆறுமுகம், சுந்தரி இருளன், ஜானகி கிருஷ்ணன் ஆகியோர் பஞ்சாயத்து தலைவர் பதவிக்கு | கட்டப்பஞ்சாயத்து | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போட்டியிடுகின்றனர். ரூ. 10 லட்சத்திற்கு விற்குமாறும் தான் பஞ்சாயத்து தலைவரை தேர்வு செய்வதாக சொல்லி முத்து இருளன் உட்பட 50 பேர்கள் கிராம மக்களை அச்சுறுத்தி வருவதாக கிராம மக்கள் புகார். | | |
| 2497. | 14.10.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் அருகே பெரிய உலகாணியைச் சேர்ந்த வையாபுரி மனைவி திருமாத்தாள் என்ற ஸ்ரீதேவி(30). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த ஸ்ரீதேவி விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | தினத்தந்தி |
| 2498. | 14.10.2011 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் அருகே உள்ள அய்யானர்புரத்தைச் சேர்ந்த ஜெயபால் தனது கடையில் பதுக்கிவைத்திருந்த 10 மூடை ரேசன் பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தினத்தந்தி |
| 2499. | 14.10.2011 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி அருகே கல்லல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் செம்பனூர் கிராம சுகாதார சார்பில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பற்களை பாதுகாப்பதற்கான மாத்திரை வழங்கப்பட்டது. 3ம் வகுப்பில் படிக்கும் 24 மாணவ, மாணவிகள் இந்த மாத்திரையை சாப்பிட்டதால் வாந்தி. மாணவ, மாணவிகள் மருத்துவமனையில் சிகிச்சை. | வகுப்பறை வன்முறை & குழந்தைகள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 2500. | 14.10.2011 | **நாமக்கல் மாவட்டம்:** முல்லைநகரில் வசிக்கும் சத்யாதேவி மகள் சிந்து. புதுச்சேரியில் மருத்துவராகப் பணிபுரியும் சிந்து தனது தாயர் வீட்டிற்கு வந்தார். வீட்டில் தனியாக இருந்த சிந்து மற்றும் அவரது பாட்டி விசாலாட்சி இருவரையும் மர்ம நபர்கள் கழுத்தை அறுத்துக் கொலை செய்ததோடு அவர்கள்அணிந்திருந்த 28 பவுன் நகையை கொள்ளையடித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |
| 2501. | 14.10.2011 | **சென்னை மாவட்டம்:** காஞ்சிபுரம் வரதராஜகோவில் மேலாளர் சங்கரராமன் கொலை வழக்கில் உண்மையைக் கூறினால் தனது மகள், மற்றும் மகனை கொலை செய்துவிடுவதாக காவல்துறையினர் மிரட்டியதால் முரண் சாட்சி அளித்ததாக சங்கரராமனின் மனைவி சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை மிரட்டல் & காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 2502. | 14.10.2011 | **சென்னை மாவட்டம்:** திருநின்றவூர் பேரூராட்சி 13 வது வர்டு உறுப்பினரும், | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | சிபிஎம் வேட்பாளருமான ராபர்ட் எபிநேசர் தனது வார்டில் மூன்று மாதகாலமாக குப்பைகள் அள்ளப்படாமல் தேங்கியுள்ளதாக அதிகாரிகளுக்கு கடிதம் எழுதியும் நடவடிக்கை எடுக்காததால் ஆத்திரமடைந்த ராபார்ட் எபிநேசர் பொதுமக்கள் உதவியுடன் குப்பைகளை அள்ளி பேரூராட்சி முன்பு கொட்டியதால் ஆத்திரமடைந்த அதிகாரிகள் ராபர்ட் எபினேசர் மீது புகார். காவல்துறை ராபர்ட்ட எபினேசரை கைது. ராபார்ட் எபினேசர் மீது பொய் புகார் புனைந்த கைது. காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என மார்க்சிஸ்ட் கட்சி கண்டனம். | | |

மக்கள் கண்காணிப்பகம்